தேர்வுகள்// //அவசரம்// //தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3557/ஆ4/2024 நாள்.15.10.2024

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் –பள்ளி மாணவர்கள் பெயர் பட்டியல் –EMIS விவரங்கள் அடிப்படையில் தயாரித்தல் மற்றும் மாணவர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துவது கூடுதல் கால அவகாசம் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் –தெரிவித்தல் –சார்பு

பார்வை 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 012426 /எப்.1/2024 நாள் 15.10.2024

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் , 2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை 24.09.2024 முதல் 15.10.2024 வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் ஒரு சில பள்ளிகளின் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன எனத் தெரியவருவதால், பத்தாம்வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கு 22.10.2024 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது. இதுவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் கடைசி வாய்ப்பாகும். இதன்பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே. அனைத்து வகை உயர்/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை 22 .10.2024–க்குள் நிறைவு செய்திட தெரிவிக்கப்படுகிறது .

பள்ளித் தலைமையாசிரியர்கள், பத்தாம் வகுப்பு,மேல்நிலை முதலாமாண்டு மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம். மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பத்தாம் வகுப்பு எனில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலக தேர்வுகள் பிரிவிலும் , மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் எனில் வேலூர் முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் மூன்று பிரதிகளில் 18.10.2024 ஒப்படைக்கவேண்டும்.

இணைப்பு :

1. மாற்றுத்தி திறனாளர் விண்ணப்ப படிவம்
2. அரசாணை
3. படிவம் 1& 2

// ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை  உயர்/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் வே.மா.

நகல் :

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.